1993 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 480, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

480—

வெட்டன்விடுதியில் புதிய பிற்பட்டோர் நலவிடுதி கட்டும் திட்டம்.

*11178—திரு. சி. சுவாமிநாதன் :
மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் உள்ள வெட்டன்விடுதிக்கு புதியதாக பிற்பட்டோர் நல விடுதி கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம் வெட்டன்விடுதியில் பிற் படுத்தப்பட்டோர் நல விடுதி இல்லாததால் விடுதிக்கு கட்டி டம் கட்டுவது என்பது எழவில்லை.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ஆலங்குடி தொகுதியில் உள்ள வெட்டன் விடுதியில் ஆதிதிராவிட நலத்துறையிலே ஒரு மாணவர் விடுதி இயங்கிக் கொண்டு இருக்கிறது. அங்கேயுள்ள உயர்நிலைப் பள்ளி யில் 400 மாணவர்கள் படித்துக்கொண்டு இருக்கின்றார்கள். அந்த மாணவர் விடுதியில் 4 பேரைத்தான் பிற்பட்ட வகுப்பிலே யிருந்து சேர்க்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. வருகின்ற நிதி ஆண்டிலிருந்து அந்த மாணவர் விடுதியிலே 19 சதவீதம் சீட்டு களை அதிகரித்து, பிற்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கித் தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடங்களிலே விடுதி கட்டப்பட வேண்டுமென்றால், கட்டிட உரிமையாளரால் வழக்கு தொடுத்து காலி செய்யச் சொன்னாலும், கட்டிட உரிமையாளர் காலி செய்ய வற்புறுத்தினாலும் மட்டுமே அந்த இடங்களிலே விடுதி கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.